## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

இலங்கை வங்கியின் கூட்டிணைந்த கிளையின் நடைமுறைக் கணக்கின் காசேட்டின் படியான மீதிக்கும் சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்குமிடையே ரூபா 4,338 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய குவைட் இழப்பீட்டு நிதியமாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,303,706,838 தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதில் ரூபா 2,260,225,494 தொகை நீண்ட கால மற்றும் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கீழே காண்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு ஊழியர்களுக்குச் சொந்தமான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,324,036 கூட்டுத்தொகையான பணத்தினை வேறாக வங்கிக் கணக்கில் முதலீடு செய்வதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பணியகம் பொது சேகரிப்புக் கணக்கில் பேணியிருந்தது.

| விபரம் | தொகை |
| --- | --- |
| | ரூபா |
| புலம்பெயர்ந்தவர்களின் முறைப்பாடுகளைத் தீர்த்துவைப்பதற்காகப் பெறப்பட்ட பணம் | 14,530,607 |
| கொரியா வேலை வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் பிணை வைப்பு | 17,399,465 |
| காப்புறுதி இழப்பீடாக தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைத்த பணம் | 4,393,964 |
| | 36,324,036 |

**1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சென்னையில் மருத்துவ நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக 4,650 அமெரிக்கா டொலரிற்குச் சமனான தொகையும் ரூபா 134,890 தொகையும் செலவிட்டு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருந்த போதிலும் அதன் சாத்திய வள ஆய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையின் 02 வங்கிக் கணக்குகளில் நிலவிய ரூபா 5,763 மற்றும் ரூபா 1,444 தொகைகளான மேலதிகப் பற்று மீதிகளை உறுதிப்படுத்தப்படுவதற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பணியகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் வருமான வரிக்கு முன்னர் ரூபா 606.4 மில்லியன் மிகையினை விளைவித்திருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 591.08 மில்லியனாக இருந்தது. இதன் பிரகாரம் மிகையில் ரூபா 15.32

மில்லியன் அதாவது 2.6% ஆன அதிகரிப்பு சுட்டிக் காட்டப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது மொத்த வருமானம் ரூபா 152 மில்லியனால் அதிகரித்தமை இதற்குத் தாக்கமளித்திருந்தது.

(2010 ஆம் ஆண்டிற்காக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிராமையால் ஒப்பீட்டு ரீதியான நிதி விளைவுகள், பணியகச் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மாத்திரம் காண்பிக்கப்பட்டுள்ளன.)

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பணியகத்தின் நிதி நிலைமை தொடர்பான மதிப்பீட்டின் போது பணியகத்தின் செயற்பாடுகள் நட்டமடையும் நிலைமையினை வெளிப்படுத்தியதுடன் அச் செயற்பாட்டு நட்டம் முதலீட்டு வட்டியின் மூலம் ஈடுசெய்யப்பட்டது. 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான நிதி விளைவுகள் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | **2011** | **2010** | **2009** |
|---|---|---|---|
| | **ரூபா ‘000** | **ரூபா ‘000** | **ரூபா ‘000** |
| செயற்பாட்டு வருமானம் | 1,209,369 | 1,164,160 | 1,011,094 |
| மொத்தச் செலவினம் | 1,655,585 | 1,518,276 | 1,362,321 |
| செயற்பாட்டு நட்டம் | (446,216) | (354,116) | (351,227) |
| முதலீட்டு வட்டி | 618,938 | 520,461 | 486,085 |

இதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் செயற்பாட்டு வருமானம் 15% மற்றும் 20% ஆகவும் மொத்தச் செலவினம் 11% மற்றும் 22% ஆகவும் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டு நட்டம் 0.8% மற்றும் 27% ஆகவும் அதிகரித்திருந்தமை சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் முதலீட்டு வட்டியில் 7% மற்றும் 27% ஆன முன்னேற்றமும் சுட்டிக்காட்டப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொரிய வேலைவாய்ப்பிற்காகச் செல்லும் ஒரு நபரிடம் இருந்து ரூபா 49,500 அளவான பணம் நலன்புரி நடவடிக்கைகளுக்காக அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட பணம் ரூபா 201,223,729 ஆகக் காணப்பட்டது. இவ்வாறு நலன்புரிக்காக பணத்தை அறவிட்ட போதிலும் எவ்வித நலன்புரி நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன் இப் பணத்தினை வேறாக வங்கிக் கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பொது வங்கிக் கணக்கின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. நலன்புரி நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 45,076,170 தொகை கொரியா நிறுவகம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந் நிறுவகத்தினால் எவ்வித நலன்புரி நடவடிக்கையும் 2012 யூன் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொரிய பயிற்சிக்காக ஒரு நபரிடம் இருந்து ரூபா 15,000 தொகை பணியகத்தினால் அறவிடப்பட்டிருந்ததுடன் அப் பயிற்சி நடவடிக்கை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக அத் தனியார் கம்பனிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 69,257,429 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பணியகத்திடம் இதுவரையில் 25 பயிற்சி நிலையங்களும் பயிற்சிகளுக்குப் பொறுப்பாக ஏறத்தாள 200 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கையில் பயிற்சிக்கு அவசியமான வசதிகள் பணியகத்தினால் மேற்கொள்ளப்படாது கொரியா புலம்பெயர்ந்தவர்களின் பயிற்சி நடவடிக்கைகள் வேறு நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டமையால் இதன் மூலம் பணியகத்திற்கு கிடைக்கக்கூடியதாக இருந்த வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) கொரியா புலம்பெயர்ந்தவர்களுக்கு மீளச் செலுத்தப்படுவதற்காக ஒருவருக்காக ரூபா 50,000 படி 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டு சேவை முகவர் நிறுவகத்தில் வைப்புச்

செய்யப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டு முதல் நாடு திரும்பும் புலம்பெயர்ந்தவர்களுக்கு அத் தொகை செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவர்களுக்கு ரூபா 25,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளச் செலுத்தப்படாத தொகை ரூபா 28,740,000 ஆகக் காணப்பட்டது. இத் தொகையினைச் செலுத்துவது தொடர்பாக புலம்பெயர்ந்தவர்கள் முறைப்பாடு செய்திருந்த போதிலும் இது வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பணியகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ‘‘ஒருங்கிணைந்த ஐந்தொகையின் பிரகாரம் பின்வருமாறு பல்வேறு நிறுவகங்களுக்கு ரூபா 18,672,448 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றை அறவிடுவது தொடர்பாக எவ்வித பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | 2011 |
|---|---|
| | ரூபா |
| நானாவித வைப்புக்கள் | 17,599,463 |
| ஏனைய பெறவேண்டியவைகள் | 29,375 |
| பெறவேண்டிய கொரியா இழப்பீடு | 156,000 |
| இத்தாலியில் உள்ள உரோமாபுரி தூதரகம் | 887,610 |
| | 18,672,448 |

2009 ஆம் ஆண்டு முதல் 02 வங்கிக் கணக்குகளின் கீழ் இனங்காணப்படாத ரூபா 812,260 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் மற்றும் 2004 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் வைப்புச் செய்யப்பட்ட எனினும், தேறாத ரூபா 750 தொகையான மீதியை தீர்ப்பதற்கு 2013 சனவரி 09 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

நி.பி. 371 இன் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரே தடவையில் ரூபா 20,000 உச்ச அளவு தொகையின் கீழ் குறித்த பணிக்கான உப கட்டுநிதி வழங்கப்படலாம் என்ற போதிலும் அந்த எல்லைக்கு மேலாக ஒரே தடவையில் ரூபா 100,000 இற்கு கூடுதலாக 95 உத்தியோகத்தர்களுக்கு குறித்த பணிக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 50% இற்கு மிகையான சேமிப்புகளும் வெளிப்படுத்தப்பட்டதன் காரணம் சரியாக மதிப்பீடு செய்யப்படாது கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கரப்பந்தாட்ட விளையாட்டிற்காக பணியகம் ரூபா 6,119,304 தொகையைச் செலவிட்டிருந்ததுடன் இதில் ரூபா 1,500,000 தொகை கடற்கரை விளையாட்டு விழாவிற்காகவும் ரூபா 1,159,304 தொகை சீனாவில் நடாத்தப்பட்ட 16 ஆவது ஆசிய மகளிர் கரப்பந்தாட்டப் போட்டிக்காகவும் ஆறு வீராங்கனைகளும் இரு உத்தியோகத்தர்களும் வெளிநாட்டிற்குச் செல்வதற்காக இடம்பெற்ற செலவாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு பயணத்திற்காக ரூபா 5,631,853 தொகையும் வாடகை வாகனச் செலவினத்திற்காக ரூபா 4,691,112 தொகையும் அமைச்சிற்காக பணியகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

2001 யூன் 01 ஆம் திகதி சகன பியச நிலையம் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பம் வரை காணப்பட்ட அதிகுளிரூட்டி மீளாய்வாண்டு வரை பத்து ஆண்டுகளாக உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 52(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே வேலைவாய்ப்பிற்காக ஒரு நபர் சேர்த்துக்கொள்வது தொடர்பான

அனுமதிப்பத்திரத்தை கொண்டிருப்பவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல தரகுப் பணத்தில் இருந்து 5% ஆன விகிதாசாரத்தில் கணக்கிடப்பட்ட செஸ் வரி செலுத்தப்பட வேண்டும். மேலும் 2009 இன் 56 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 7(5) ஆம் பிரிவின் பிரகாரம் அத் தொகை நியாயமற்ற மற்றும் பெறவேண்டிய தொகையிலும் பார்க்க குறைவான தொகையான சந்தர்ப்பத்தில் தரகுப்பணமாக அமைச்சரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையே இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அந்த அதிகாரச்சட்டத்தின் 7(6)(3) ஆம் உப பிரிவின் கீழ் செஸ் வரி செலுத்தும் அனுமதிப்பத்திரம் கொண்டிருப்பவரால் பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தின் போது அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருப்பவர் குற்ற மிளைத்தவராவதுடன் ரூபா 5,000 இற்குக் குறையாத தண்டப்பணத்திற்கு அவர் உட்பட வேண்டும். மேற்குறித்த பிரிவுகளின் மூலம் அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தும் அனுமதிப்பத்திரம் கொண்டிருப்பவர்களிடமிருந்து அவர்கள் உழைத்த தரகுப் பணத்தின் பிரகாரம் செஸ் வரியினை அறவிடுவதற்கு பணியகம் நடவடிக்கை எடுக்காது புலம்பெயர்ந்தவர்களுக்காக ரூபா 500 மற்றும் ரூபா 250 தொகைப் படி பல விகிதங்களில் செஸ் வரி கணக்கிடப்பட்டு அறவிடப்பட்டிருந்தது.

## 3.6 வேறு அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட பணியகத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பந்திகளுக்கு முரணாக பணியகத்தின் வளங்கள் வேறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(அ) அரச முயற்சிகளின் வளங்கள் வரிசை அமைச்சினால் பயன்படுத்தப்படலாகாது என்ற போதிலும் பணியகத்தின் 05 வாகனங்கள் அமைச்சு மற்றும் வெளி நிறுவகங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 4,356,773 தொகை வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) பணியகத்தின் S - IV பொது உதவியாளர் பதவிக்கு 2011 யூன் 1 ஆம் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் மூன்று உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு அத் திகதி முதல் அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை

பணியகத்தினால் செலுத்தப்பட்ட ஊதியத்தின் பெறுமதி ரூபா 365,000 ஆகக் காணப்பட்டது.

(ஈ) அமைச்சின் பதவியணிக்கு 02 கணனிகளும் ரூபா 367,874 பெறுமதியான காரியாலய உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன.

## 3.7 பதவியணி நிர்வாகம்

மீளாய்வாண்டின் பதவியணி தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரம் | 237 | 162 | 75 |
| பதவிநிலையற்ற தரம் | 472 | 435 | 37 |
| சிற்றூழியர்கள் | 178 | 149 | 29 |
| மொத்தம் | 887 | 746 | 141 |

மேற்குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாது ஒப்பந்த மற்றும் பதில் கடமையாற்றும் அடிப்படையில் முறையே 50 உத்தியோகத்தர்களும் 20 உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 3.8 வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாடகை வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பணியகத்தின் வாகனப் பட்டியலின் படி குழாமிற்கு 20 இற்கு மேற்பட்ட வாகனங்கள் இருக்கையில் 2011 சனவரி மாதம் முதல் நவம்பர் 16 வரை நாளாந்த போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தனியார் போக்குவரத்து நிறுவகத்திற்கு ரூபா 2,580,310 தொகை

செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் குழாமிலுள்ள வாகனங்களின் பயன்பாடு தொடர்பாக பணியகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ii) தனியார் நிறுவகத்திடம் இருந்து வாடகை வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்படுவது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரை செய்யப்படாதிருக்கையில் அத் தனியார் நிறுவகத்திடம் இருந்து 2011 ஆம் ஆண்டின் போது வாகனங்கள் வாடகைக்குப் பெறப்பட்டு ரூபா 1,424,076 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) எரிபொருட் பயன்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் எல்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் அந்த எல்லைகளுக்கு மிகையாக ரூபா 1,029,593 தொகையான எரிபொருளைப் பயன்படுத்தியிருந்தனர்.

## 4. கணக்களிதன்மையும் நல்ஆளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட பாதீடு வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பணியகத்தின் திருத்தப்பட்ட பாதீடு 2011 திசெம்பர் 23 ஆம் திகதியிடப்பட்டு 2011 திசெம்பர் 30 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடு உள்ளபடியான நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடப்படுவது அர்த்தமற்றதாகியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) முற்பணக் கொடுப்பனவு

(இ) கடன்பட்டோர் மீதியைத் தீர்த்தல்

(ஈ) கடன்பட்டோர் மீதியினை அறவீடு செய்தல்

(உ) வாகனப் பயன்பாடு

(ஊ) பௌதீக வளக் கட்டுப்பாடு